REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: சித்திரை 28உ புதன் (11—5—55) ★ ★ வெளியூர்: சித்திரை 29உ வியாழன் (12—5—55) [இதழ் 282

நேருவின் கலக்கம்!

"எதிர்க் கட்சியினருடன் போராடுவதற்கு நான் சிறிதும் பயப்படவில்லை; அல்லது சில தேர்தல்களில் தோற்பது குறித்தும் கிலி கொள்ளவில்லை; ஆனால், காங்கிரஸ் ஸ்தாபனத்திற்குள்ளேயே சீர்குலைவு ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது என்பது பற்றித்தான் பயப்படுகிறேன்; மாநிலங்களுக்கிடையே உள்ள எல்லைகளைப் பற்றி ஏற்படும் தகராறுகளைக் கண்டு பயப்படுகிறேன்; காங்கிரஸ்காரர்கள், தங்களிடத்தில் உள்ள சில்லறைத் தகராறுகளை விட்டொழிக்க வேண்டும்."

இவ்வாறு, பெர்காம்பூரில் நடைபெற்ற அ. இ. கா. குழுவின் இரகசியக் கூட்டமொன்றில் பேசுகையில் பிரதமர் நேரு குறிப்பிட்டார்.

தொழிலாளர்-தொழிற்சங்க உறவு

கொடி படர உதவும் கொழு கொம்பாக தொழிற்சங்கம் வளர அரசியல் கட்சி இருக்க வேண்டும்

சென்னை தொழிலாளர் மாநாட்டில் தி. மு. கழகப் பொதுச்செயல்லாளர் நெடுஞ்செழியன் சிறப்புரை

"மல்லிகைக் கொடி படர கொழுகொம்பு உதவுவதுபோல, தொழிற்சங்கம் எனும் மல்லிகைக் கொடி படர, அரசியல் கட்சிகள் எனும் கொழுகொம்பு பயன்பட வேண்டும் என்பதுதான் தொழிற்சங்க இயக்கம் பற்றிய தி. மு. கழகக் கருத்தாகும்; ஆனால், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகளின் வளர்ச்சிக்காக—ஆதரவிற்காகப் பயன்படும் நிலை, இன்று, இந்த நாட்டில் இருப்பதைக் காண்கிறோம். அரசியல் கட்சிகள் கொழுகொம்பாக இருக்க வேண்டியது போக, அவை படர்ந்து வளர தொழிற்சங்கங்களைக் கொழுகொம்பாகப் பயன்படுத்துகிற தலைகீழான நிலை இருக்கின்றது."

"ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலையில் பல அரசியல் கட்சிகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் இருக்கலாம்; ஆனால், தொழிற்சாலையில் உள்ள குறைகள், எல்லாத் தொழிலாளர்களுக்கும் பொதுவானவை; குறைகள்—அளவிலோ, தரத்திலோ—தொழிலாளர்கள் சார்ந்திருக்கும் பல அரசியல் கட்சிகளுக்காக மாறுபட்டிருக்க முடியாது; ஒரு தொழிலாளி காங்கிரசில் பற்றுடையவர்;- மற்றவர் கம்யூனிஸ்டு; இன்னுமொருவர் தி. மு. கழகம்; இப்படிப் பலரும் பல கட்சிகளில் பற்றும், தொடர்பும் உடையவர்களாயிருந்தபோதிலும், அவர்களெல்லோரும் ஒரே தொழிற்சாலையில் பணி புரியும் காரணத்தால், அவர்களுக்கு அந்தத் தொழிற்சாலையில் உள்ள குறைபாடுகள் ஒரே அளவிலும், தரத்திலும்தான் இருக்கும்; எனவே, அந்தக் குறைகள் களையப்பட வேண்டுமானால், அவர்கள், தங்கள் தங்கள் அரசியல் இயக்கங்களை தொழிற்சாலைக்குள் மட்டும் சற்று மறந்துவிட்டு ஒன்றுபட்டு முயன்றால்தான் முடியும்; ஒன்றுபடுவதுதான் நியாயமும்கூட!

"தொழிலாளரின் துயர் துடைப்பதற்காக உள்ள தொழிற்சங்கம், பொதுவாகவே எந்தக் கட்சி சார்பும் அற்றதாக இருந்தால்தான், எல்லாத் தொழிலாளர்களும் அங்கு ஒன்றுபட முடியும்; அப்படியில்லாமல், அந்தத் தொழிற்சங்கம் குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சியின் சார்பும், தொடர்பும் உடையதாயிருந்தால், அந்தக் குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு மாறுபட்ட கருத்துடைய இதர அரசியல் கட்சிச் சார்பும் தொடர்பும் உடைய தொழிலாளர்கள் எப்படி அங்கு ஒன்றுபட முடியும்?

"தொழிற் சங்கம் பொதுவானதாயிருந்து, அந்தத் தொழிற்சங்கத்தில் அங்கம் வகிக்கும் தொழிலாளர்கள், தங்கள் குறைகளைப் போக்கிக் கொள்ள போராட்டம் நடத்தினால், எல்லா அரசியல் கட்சியினரும், அப்போராட்டத்தில் தங்கள் ஆதரவைத்தர முன்வருவர்; அந்நிலையில், தொழிலாளர்களின் குரல் உரம் பெறும்—வலுவடையும்; கோரிக்கைகளும் வெற்றி பெறுவதற்குச் சுலபமாகும்; அவ்வாறின்றி தொழிற்சங்கம் ஒரு கட்சி சார்புடையதாயிருந்தால், அந்தத் தொடர்புடைய கட்சியினர்மட்டும்தான் தொழிலாளர் கோரிக்கைகளை நிறைவேற்றப் போராட வருவர்."

"எனவே, பொதுவான குறைகளையுடைய தொழிலாளர்கள், பல அரசியல் கட்சிகளைச் சார்ந்திருப்பினும்கூட, தங்கள் கட்சி வேற்றுமைகளை தொழிற்சங்கத்தில் மறந்துவிட்டு, பொதுவான தொழிற்சங்கத்தில் ஒற்றுமையுடன்—தங்கள் வாழ்வு முன்னேற பாடுபடவேண்டுவது அவசியம் என்று தி. மு. கழகம் கருதுகிறது; நாட்டில் உள்ள எல்லா துறைத் தொழிலாளர்களும் இதை எண்ணிப்பார்க்க வேண்டும்."

"இன்று, நாட்டில் ஒரே தொழிற்சாலையில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு பல தொழிற்சங்கங்கள் இருக்கின்றன; காங்கிரஸ் தொழிற்சங்கம், கம்யூனிஸ்டு தொழிற்சங்கம், சோஷலிஸ்டு தொழிற்சங்கம்—என்று, பல கட்சிகளும் தனித்தனி தொழிற்சங்கங்கள் அமைத்துக்கொண்டு இயங்குகின்றன; இந்த நிலைமை—கோவை, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, விக்கிரமசிங்கபுரம், இராஜபாளையம், அம்பாசமுத்திரம், திருப்பூர்—முதலிய பல இடங்களில் நிலவுகின்றது. எல்லோருமாகச் சேர்ந்து, பொது தொழிற் சங்கம் அமைப்பதற்கும், தனித் தனியாக உள்ள அரசியல் கட்சிச் சங்கங்கள் சம்மதிக்க மறுக்கின்றன.

"இதனால், இந்தக் கட்சிகளைச் சேராத தொழிலாளர்கள் என்ன செய்வது? எந்த அரசியல் கட்சி சார்புடைய தொழிற் சங்கத்தில் சென்று தங்கள் குறைகளை முறையிடுவது?—என்ற நிலை உருவாகியிருக்கிறது. பல இடங்களில், காங்கிரஸ், கம்யூனிஸ்டு, சோஷலிஸ்டு அல்லாத திராவிட கழக, தி. மு. கழகத் தொடர்பும், பற்றுமுடைய பல தொழிலாளர்கள் இந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதால்தான், இந்த நிலைமைக்கு என்ன பரிகாரம் என்பதை ஆராய்ந்து, விவாதித்து, கண்டறிந்து முடிவு செய்ய இரண்டாவது மாநில மாநாட்டை தி. மு. கழகம் எதிர்நோக்கியிருக்கிறது.

"கடந்த ஆறு, ஏழு ஆண்டு காலமாக தி. மு. கழகம் தொழிற்சங்கங்களை அமைத்து வேலை செய்யாததற்குக் காரணம், 'முடியாது' என்பதாலல்ல; மாறாக, 'தொழிற் சங்கம் பொதுவானதாக இருக்க வேண்டும்,' என்ற உயர்ந்த நோக்கத்தால்தான்; ஆனால், இன்று பல கட்சியினரும் தனித்தனித் தொழிற் சங்கங்களை அமைத்துக் கொண்டு, ஒன்றுபட மறுத்து விட்டதுடன், தி. மு. கழகப் பற்றும், தொடர்பும் உடைய தொழிலாளர்களை இக்கட்டான நிலையில் வைத்து விட்டதால்தான், இந்த நிலைமையை சீர்செய்ய என்ன வழி என்று ஆராய்ந்து முடிவு காண வேண்டியவர்களாயிருக்கிறோம், நாம்."

—இவ்வாறு, தி. மு கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை வண்ணாரப்பேட்டை பாண்டியன் திடலில், 10—5—55 செவ்வாயன்று மாலை நடைபெற்றபோது, பொறியியல், தொழிலாளர் சங்க 11-வது ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்.

மாநாட்டில் தோழர் கண்ணதாசன், தோழியர் தேசியமணி ஆகியோரும் பேசினர்.

முன்னதாக, திரு. ஏ. எஸ். மாநாட்டிற்கு தலைமை ஏற்று ஷெட்டி உரையாற்றினர்.

தோழர் ஏ. வி. குமார் சங்கக் கொடியேற்றி வைத்தார்.

தோழர் டி. கண்ணபிரான் வரவேற்புக் கழகத் தலைவராயிருந்து உரை நிகழ்த்தினர்.

பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தொடர்ந்து பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தத் தொழிற் சங்கத்தில் 4, 5 தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் குறிப்பாக ஃபீடித் தொழிலாளர்கள் — ஒன்று சேர்ந்து, பொதுவான முறையில் 'கட்சிப் பாகுபாடுகளை மறந்து பணியாற்றுகின்றனர்,' என்பது கண்டு நான் மகிழ்கிறேன்.

(4-ம் பக்கம் பார்க்க)

புதுவையில் மாபெரும் மே விழா கொண்டாட்டம்

ஈ.வெ.கி.சம்பத்-என்.வி.நடராசன் தலைமையில் சைக்கிள்-நடை ஊர்வலம்

8—5—55 மாலை 5 மணிக்குப் புதுவை மங்களகான சபாவில் இருந்து தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையில், புதுவைத் தி. மு. கழகங்களின் சார்பில் ஓர் ஊர்வலம் புறப்பட்டது. கழகக் கொடி தாங்கிய 120 சைக்கிள்களில் தோழர்கள் முன்னே அணிவகுத்துச் செல்ல, இடையே தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், என். வி. நடராசன், வாணிதாசன், சிவப்பிரகாசம் ஆகியோர் செல்ல, பின்னே புதுவை, முதலியார்பேட்டை, தேங்காய்த்திட்டு, புதுப்பாளைய ஒர்லேயான் பேட்டை, உழவர்கரை, முத்தால்பேட்டை, இலாசுப்பேட்டை, சேலியமேடு ஆகிய ஊர்க் கழகங்களின் சார்பிலும், புதுவைத் திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகச் சார்பிலும், ஏராளமான தோழர்கள் தங்கள் தங்கள் ஊர்ப் பெயர் பொறித்த நீண்ட கொடிகளைத் தாங்கி அணிவகுத்து வர, புதுவை மக்களிடையே பெருத்த வியப்பை உண்டு பண்ணும் வகையில், ஒலி முழக்கங்களை வானளாவ முழக்கிக்கொண்டு, பொதுக் கூட்டம் நடைபெற்ற ஒதியஞ்சாலைத் திடலை அடைந்தது. ஊர்வல வழியில் மாணவச் சிறுவர்கள் சிலர், தோழர்கள் சம்பத், நடராசன் ஆகிய இருவருக்கும் மலர் மாலைகள் அணிந்து மகிழ்ச்சிப் பெருக்கால் காகித மலர்களை வாரி இறைத்தனர்.

காஞ்சியில் பொதுச்செயலாளருக்கு வரவேற்பு

மாபெரும் சைக்கிள் ஊர்வலம்— மே விழா பொதுக்கூட்டம்

காஞ்சி, மே 8—

காஞ்சி நகர தி மு. கழகச் சார்பில் மே தின விழாவும், பொதுச் செயலாளர் வரவேற்பும் மிக்க சிறப்பாக இன்று நடைபெற்றது.

காலையில் மாபெரும் சைக்கிள் ஊர்வலம் ஒன்று 'திராவிட நாடு' அலுவலகத்திலிருந்து புறப்பட்டு நகரின் எல்லாப் பாகங்களிலும் பவனி வந்தது. ஊர்வலத்துக்கு காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள் தலைமை தாங்கி நடத்திச் சென்றார். தோழர்கள் இரா. வெங்கிடேசன், வி. என். மார்க் ஆகியோர் தளபதிகளாயிருந்து கண்காணித்தனர். சுமார் 400-க்கு மேற்பட்ட சைக்கிள்கள் கழகக் கொடிகளைத் தாங்கி, பவனி வந்த காட்சி பூரிக்கத்தக்கதாயிருந்தது நகரின் பல பாகங்களிலுமிருக்கும் கிளைக் கழகங்களின் சார்பில், ஒவ்வொரு வட்டாரத்திலும் ஏராளமான கொடியேற்று விழாக்கள் நடைபெற்றன. தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள், எல்லாக் கொடிகளையும் ஏற்றுவித்தார்கள். அவருக்கு ஆங்காங்கு மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் வழங்கப்பட்டன.

பல இடங்களில், நீர்மோர், பானகம், சோடா, இனிப்புகள் எல்லாம் கழகத் தொண்டர்களுக்கு அளிக்கப்பட்டது.

நண்பகல் 2 மணிக்கு ஊர்வலத்தில் கலந்துகொண்ட எல்லோருக்கும் தோழர் ஏகாம்பரனார் அவர்கள் இல்லில் உணவு அளிக்கப்பட்டது. ஊர்வலத்தில் தோழர் ஈழத்து அடிகள், தோழர் அரங்கண்ணல் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இரவு 9 மணிக்கு கண்ணன் டாக்கீஸ் மைதானத்தில் மாவட்டச் செயலாளர் தோழர் கே. டி. எஸ். மணி தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் க. வெ. முருகேசன் இயக்கப் பாடல்களைப் பாடினார். பிறகு தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம், மே தின விழாவின் சிறப்புகளைக் குறித்துப் பேசினார்.

நகரச் செயலாளராயிருந்து பணியாற்றிய தோழர் இரா. வெங்கிடேசன், மாவட்டச் செயலாளராயிருந்து பணிபுரிந்த தோழர் சி. வி. எம். அண்ணாமலை, புதிய மாவட்டச் செயலாளர் கே. டி. எஸ். மணி ஆகியோருக்குப் பாராட்டும், வரவேற்புகளும் நகர கழகச் செயலாளர் தோழர் டி. சபாபதி படித்து அளித்ததோடு, ஒவ்வொருவருக்கும் பல கழகங்கள் சார்பில் ஏராளமான கைத்தறித் துணிகளும், மலர் மாலைகளும் அளிக்கப்பட்டன. பாராட்டுக்கும் வரவேற்புக்கும் தோழர்கள் வெங்கிடேசன், அண்ணாமலை, மணி ஆகியோர் தக்க பதிலளித்தனர்.

பிறகு, மாபெரும் கைதட்டல்களுக்கிடையே பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு நகரக் கழகத்தின் வரவேற்பை தோழர் டி. சபாபதி படித்தளித்தார்.

வரவேற்பைப் பெற்றுக் கொண்டு பொதுச் செயலாளர் பதிலளித்த பின், முன்னாள் பொதுச் செயலாளரான அண்ணா அவர்களுக்கும் நகரக் கழகச் சார்பில் தோழர் டி. சபாபதி, பாராட்டை படித்தளித்தார். ஏராளமான மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அளிக்கப்பட்டன.

அதற்குப் பதிலளித்து அண்ணா அவர்கள் பேசிய பின், நகரச் செயலாளர் நன்றி கூறுதலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 11—5—'55 புதன்

ஏற்குமா, இந்த உண்மைகள்?

இந்தியத் துணைக்கண்டத்தின் ஆட்சி மொழியாக இந்தி ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டம் செயல்படுத்தப்பட்ட நாள் தொட்டு, பதினைந்து ஆண்டுகளுக்குள் ஆங்கில மொழி அகற்றப்பட்டுவிட்டு, அவ்விடத்தை இந்தி நிரப்ப வேண்டும் என்கிறது அரசியல் சட்டம்.

அந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு காங்கிரஸ் செயற்குழுவும், இந்தித் திணிப்புக் காலத்தை மூன்று கட்டங்களாகப் பிரித்திருக்கிறது.

நெய்க்கு தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா என்ற வசனம்போலவும், வேலிக்கு ஓணான் சாட்சி, ஓணானுக்கு வேலி சாட்சி என்ற கருத்துரைபோலவும், காங்கிரஸ் தீர்மானம் ஆட்சி மொழியாக இந்தியை ஒப்புக்கொண்டுள்ளதும், அந்த ஒப்புதலை ஆதாரமாகக்கொண்டு அரசியல் சட்டம் இந்தியை ஏற்றுக்கொண்டு இருப்பதும் இருக்கிறது.

காங்கிரஸ் தீர்மானம்—உருவம் என்றால், அரசியல் சட்டவிதி—அதன் நிழலாகும்; அரசியல் சட்ட ஏற்பாடு—உருவம் என்றால், காங்கிரஸ் கட்சியின் முடிவு—அதன் நிழலாகும். எனவே, ஆட்சி மொழியாக அரசியல் சட்டம் இந்தியை ஒப்புக்கொண்டுள்ளதற்கான நியாயத்தையும், அதைப் பதினைந்து ஆண்டுகளுக்குள் வெற்றி பெறச் செய்வதற்காக காங்கிரஸ் கண்டுள்ள முடிவுகளிலுள்ள நியாயத்தையும், இந்தியா போன்ற, இந்தியை விட வளமுள்ள பல உயர்ந்த மொழிகள் வழக்கிலுள்ள ஒரு துணைக்கண்டத்தில், ஆட்சி மொழியாக இருக்க இந்திக்கு மட்டுமே உள்ள அருகதையை முடிவு கட்டுவதற்கு, ஆதாரங்களாக ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசியல் சட்டம் காங்கிரஸ் கட்சியின் எதேச்சாதிகார விளைவு. காங்கிரஸ் செயற்குழு தீர்மானமும் அந்நிலையில் உள்ளதேயாகும். இரண்டும் வடநாட்டு இந்தி மொழி வெறியர்களின் ஆதிக்கவழி அமைந்துள்ளனவாகும். எனவே, அரசியல் சட்ட ஒப்புதலாலும், காங்கிரஸ் செயற்குழு கருத்தாலும், வளமில்லாத இந்தியை ஆட்சி மொழியாக ஒப்புக்கொண்டதும், பதினைந்து ஆண்டுகளுக்குள் நிறைவேற்ற நினைப்பதும் அதிக்கிரமத்திலும் அதிக்கிரமமாகும்.

அரசியல் சட்ட ஏற்பாடும், காங்கிரஸ் செயற்குழு தீர்மானமும், வளமற்ற இந்தியை வேண்டப்படாத மக்களிடம் வலுக்கட்டாயமாகத் திணிக்கத்தான் முடியுமேயல்லாது, உலக மொழியான ஆங்கிலத்தைப் போன்று, வளமுள்ள மொழியாக உருவாக்க முடியாது. உலக மொழியான ஆங்கிலம்போல் இல்லையானாலும், இந்தமிழ் போன்றோ, ஆச்சாரியார் குறிப்பிட்டுள்ளதுபோல் வங்கமொழி—மராட்டிய மொழிபோன்றோ கூட குறிப்பிட்டுள்ள கால கெடுவிற்குள் இந்தி மொழியை உயர்த்திவிட முடியாது. பதினைந்து ஆண்டுகளென்று இல்லாமல், மேலும் பல ஆண்டுகள் சென்றபோதிலும்கூட, சிறந்த ஆட்சி மொழியாக விளங்கும் அருகதை இந்தி மொழிக்கு ஏற்படப் போவது கிடையாது என்பது நிச்சயத்திலும் நிச்சயம்.

பொதுவாகக் கடந்த இருநூறு ஆண்டுகளாகவும், குறிப்பாகச் சென்ற ஒரு நூற்றாண்டாகவும் இந்தியத் துணைக்கண்டத்தில் ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருந்திருக்கிறது. துவக்கப் பள்ளிமுதல் கல்லூரி வரையிலும் அரசாங்க அலுவலகங்களிலிருந்து உயர் நீதிமன்றம் வரையிலும், முச்சந்தி முதல் தொழில் நிலையங்கள் வரையிலும் ஆங்கில மொழி இடம் பெற்றிருந்தது — இருந்தும் வருகிறது. அதுவுமன்றி, இந்தி மொழிக்கு இல்லாத விஞ்ஞானக் கலை நுணுக்கம் முழுதும் நிரம்பிய மொழியாக ஆங்கிலம் இருக்கவும் இருக்கிறது. அத்தகு சிறப்பும், வாய்ப்பும் ஆங்கில மொழிக்கு இருந்தபோதிலும்கூட, அது மக்கள் மொழியாக மாறத் தவறிவிட்டிருக்கிறது. இத்துறையில் இருநூறு ஆண்டு கால முயற்சி நடைபெற்றிருந்தும்கூட, ஆங்கிலம் இம்மண்ணில் கால்கொள்ளவில்லை. இம்மகத்தான உண்மையை முக்கியமாக இந்தி ஆதரவாளர்களும், சிறப்பாக இந்தி வெறியர்களும், ஒருமுறைக்குப் பன்முறை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்தியத் துணைக் கண்டத்தில், தம் தம் மொழியே உயர்வுடையது என்ற மொழிப்பற்று அறவே அரும்பாத நேரத்தில், ஆங்கிலம் புகுத்தப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும்கூட, அதன் போதனைக்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் அளவிற்கு, ஆங்கில மொழி வெற்றி பெறவில்லை. முயற்சியோ பெரிது; வெற்றியோ மிக மிகச் சிறிது.

மொழித் துறையில் ஆங்கிலம் புகுத்தப்பட்ட நேரத்தில் இருந்தது போன்ற சூழ்நிலை, இந்தித் திணிக்கப்படும் இந்த நேரம் இருக்கவில்லை. இதை அறியாதார் ஒருவரும் இருக்க முடியாது.

இந்தியத் துணைக்கண்டத்தில் வழங்கும் மொழிகள் வழிவந்த அனைவரும், தங்கள் தங்கள் மொழியின் உயர்விலும் வளர்ச்சியிலும் பற்றும் பெருமையும் கொண்டுள்ள காலம் இது. இக்காலத்தில், பிற மொழியினர் வெறுப்பையும் எதிர்ப்பையும் அலட்சியப்படுத்தி, கட்டாயமாகத் திணிக்கப்படுகிறது இந்தி. வீண் வம்பு வளருமேயல்லாது வெற்றி கிட்டாது.

தங்கள் மொழி சிறந்தது, தம் மொழி வளர்ச்சி பெற வேண்டும், தம் மொழி அரியாசனம் ஏறவேண்டும் என, இங்குள்ள ஒவ்வொரு மொழியினரும் விழைகின்றனர்—விடா முயற்சியில் ஈடுபட்டும் உள்ளனர். இவர்கள் முயற்சி மொழிப் பற்றின் விளைவே அல்லாது, அரசாங்கப் பதவி தேடும் துறைபற்றியது அல்ல.

பதவி கருதி, இந்தியை ஏற்கும் சிலபலர் போல, மேற்குறிப்பிட்ட மொழிப்பற்றினர் கட்டாய இந்தியை எதிர்க்கவில்லை. தங்கள் மொழியும், அதனால் உருவாகி வளர்ந்துள்ள தங்கள் வாழ்க்கை வழியும், கட்டாய இந்தியால் சீரழியும், என அவர்கள் திட்டமாக நம்புகின்றனர். இந்தியத் துணைக் கண்ட வரலாறே, தங்கள் கருத்தை வலியுறுத்துவதையும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஏற்குமா, இந்தி வெறியர்களுக்கு இந்த உண்மைகள்?

இந்தி எதிர்ப்பு, வெறும் சலசலப்பு என்று இன்று கருதிக் கொண்டு இருக்கும் இந்தி வெறியர்கள், இவ்வெதிர்ப்பு பெரும் புயலாக மாறும் பொழுதுதான், தங்கள் பிடிவாதத்தின் தன்மையையும், அதன் விளைவையும் உணருவார்கள். அதுவரை, அறிவுரை, அவர்களுக்கு வெறும் சல சலப்பாகத்தான் தெரியும்!

பால்காரர் காலனி

சென்னை, மே 9—

சென்னை நகருக்கருகில் உள்ள எருக்கஞ்சேரி எனும் கிராமத்தில் பால்காரர்கள் 'காலனி' ஒன்றை நிறுவலாமென்று டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட நிபுணர் குழு சிபாரிசு செய்திருந்த யோசனையை, சென்னை சர்க்கார் ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

இந்த யோசனை, 'சாக்கடைத் தண்ணீரை உபயோகித்து இந்தக் கிராமத்தில் ஒரு பண்ணையை ஏற்படுத்தவேண்டும்,' என்று சென்னை நகர சபை மேற்கொண்டுள்ள முடிவை ஒட்டியதேயாகும்.

இந்தச் சிபாரிசை ஏற்றுக் கொண்டதையொட்டி, அக்கிராமத்தில் பால்காரர்களுக்கென வீடுகள் கட்டிக் கொள்ளவும், மாட்டுத் தொழுவங்கள் கட்டவும் 100 ஏகர் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய சர்க்கார் உத்தரவிட்டுள்ளதாம்.

பால்காரர்களின் குடும்பங்களுக்குக் குடியிருப்பு வசதிக்காக அங்கு 100 வீடுகள் கட்டித்தர உத்தேசிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

உத்தேசிக்கப்பட்டிருக்கும் இந்த வீடுகள் ஒவ்வொன்றும் கட்ட ரூ 1500 செலவாகுமாம்.

இது தவிர, கறவை மாடுகளைக் கட்டி வைக்கக் கூடிய 40 மாட்டுத் தொழுவங்கள் கட்டப்படுமென்றும், மொத்தத்தில் பால்காரர்கள் குடும்பத்தவருக்குக் கட்டித் தரப்படும் வீடுகளுக்கு ரூ. $1\frac{1}{2}$ இலட்சமும், தொழுவங்களுக்கு ரூ. 3 லட்சமும், கறவல் நின்று போன மாடுகளுக்கு தொழுவங்கள் கட்டித் தர ரூ. 60,000–மும், காலனி சிப்பந்திகளுக்கான வீடுகள் கட்ட ரூ. 50,000-மும் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

நிபுணர் குழு, இந்த வேலைகளுக்காக 60 ஏகர் நிலமே போதுமென சிபாரிசு செய்துள்ளதாம்.

ஆனால் வாங்கப்பட இருக்கும் 100 ஏகர் நிலமும் குறைந்தது 4,000 மாடுகளுக்கும், 400 பால்காரர் குடும்பங்களுக்கும் வசதி செய்வதற்கேயாகும் என்று கூறப்படுகிறது.

'டெல்கோ' தொழிற்சாலை இதுவரை மொத்தம் 950 நீராவி 'ரோட் ரோலர்' என்ஜின்களை உற்பத்தி செய்துள்ளது.

இந்தியாவில் 1954-ம் ஆண்டு இறுதியில், தீப்பெட்டி உற்பத்தியில் ஈடுபட்டு வந்த சிறு தொழிற்சாலைகளின் மொத்த எண்ணிக்கை 180 ஆகும்.

திரு-கொச்சியில் மீதமாகும் நீரைப் பயன்படுத்தும் பிரச்சினை

சென்னை ஏற்பாட்டிற்கு எதிராகத் தூபம்!

"'திரு—கோச்சி பயன்படுத்திக் கோண்டது போக, மிகுதியாக உள்ள நீரை சென்னை மாநிலப் பகுதிகளின் விவசாயத்திற்குப் பயன்படுத்துவது' என்ற சென்னை அரசாங்கத்தின் ஏற்பாட்டினால், மலைத் தோடர்களுக்கு இப்பக்கத்தில் உள்ள திரு-கோச்சியிலுள்ள இலட்சக்கணக்கான மக்களின் பொருளாதார நலமும், நல்வாழ்வும் அறவே பாதிக்கப்படும்."

—இச்சூருக்லை திரு-கொச்சியைச் சேர்ந்த ஜி. பரமேஸ்வரன் பிள்ளை அறிவித்துள்ளார்.

மேற்படியார், இந்தியப் பேரரசின் சார்பில் ஏற்கனவே ஆஸ்திரேலியாவில் தூதுவராகவும், திரு-கொச்சி அரசாங்கத்தில் முன்னாள் முதலமைச்சர் செயலாளராகவும் இருந்து வந்திருக்கிறார்.

திரு-கொச்சி மக்களும், அரசாங்கத்தினரும், சென்னை அரசாங்கத்தின் கோரிக்கையை முழு மூச்சாக எதிர்க்க வேண்டுமெனவும் அவர் தூபமிட்டிருக்கிறார்.

மேற்குத் தொடர்ச்சி மலைகளின் உச்சியில் விழுந்து திரு—கொச்சி பகுதியில் பாய்ந்தோடும் நீரை, திரு — கொச்சி பயன்படுத்திக் கொண்டது போக, மிகுதியாக உள்ள நீரை, மலைகளைக் குடைந்து ஒட்டியுள்ள சென்னை மாநிலப் பகுதிகளின் விவசாயத்துக்குப் பயன்படுத்துவது என்ற ஒரு ஏற்பாடு, சென்னை அரசாங்கத்தின் தீவிர ஆலோசனையில் இருந்து வருகிறது.

அமெரிக்க உதவியை நிராகரிப்பதாலேயே உலக சமாதானம் தோன்றிவிடுமா?

ஆச்சாரியாருக்கு நிதி அமைச்சர் தேஷ்முக் பதில்

ஐதராபாத், மே 9—

"பிற நாடுகளிடமிருந்து நட்பு முறையில் கிடைக்கும் உதவிக்கான எந்த சந்தர்ப்பங்களையும் நாம் எளிதில் கைவிட்டுவிடக் கூடாது; அதை நிராகரித்தால் நமக்கு பாரம்தான் அதிகரிக்கும்,"

என்று, இந்திய சர்க்கார் நிதி அமைச்சர் சிந்தாமணி தேஷ்முக், நிருபர்கள் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வது, பரிசோதனை நடத்துவது ஆகியவற்றிற்கு நமது எதிர்ப்பையும், ஆட்சேபணையையும் தெரிவிக்கும் வகையில், நாம், நமக்குக் கிடைக்கும் அன்னிய நாட்டு உதவியைத் 'தியாகம்' செய்ய வேண்டும்" என்று ஆச்சாரியார் தெரிவித்திருந்ததற்குப் பதிலளிக்கும் வகையிலேயே மேற்கண்டவாறு நிதி அமைச்சர் கூறியிருக்கிறார்.

"பிறநாடுகளின் உதவியை நாம் நிராகரித்துவிடக்கூடுமா என்பது நமது பொருளாதாரத் துறையின் நிலையைப் பொறுத்த ஒரு பிரச்சினையாகும்; ஆனால், அது, நமக்கு வெறும் கட்டுப்பாடுகள் மட்டுமே விதிர்த்துக்கொள்வதைப் பொறுத்த ஒன்றல்ல" என்றும் நிதி அமைச்சர் கூறியிருக்கிறார்.

மேலும் அவர் தெரிவித்திருப்பதாவது :—

"அமெரிக்கா அளிக்கும் உதவியை நாம் பெற்றுக்கொள்ளாமல் இருந்துவிடுவதினாலேயே உலக சமாதானம் தோன்றிவிடும் என்று கூறிவிட முடியுமா? இந்தப் பிரச்சினை குறித்து நான் அதிகமாக ஒன்றும் சொல்லிக் கொள்ள ஆசைப்படவில்லை.

"இந்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பல இலட்சிய எல்லைகளை நாம் நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது. நாட்டின் சராசரி வருமானத்தை 5 சதவிகிதம் அதிகரிக்கச் செய்வதோடு, சுமார் 1 கோடி 10 இலட்சம் பேருக்கு வேலை வசதியும் செய்துதர வேண்டியிருக்கிறது. இவைகளுக்கெல்லாம் மொத்தம் செலவழிக்க வேண்டிய தொகை ரூ. 6,300 கோடி. இத்தொகையில் தனிப்பட்டோர் முயற்சிக்கு ரூ 2000 கோடியும், சர்க்கார் திட்டங்களுக்கு 4,300 கோடி ரூபாயும் செலவழிக்க வேண்டியதாக இருக்கிறது. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குக் கிடைத்த பிறநாட்டு உதவியை கணக்கிட்டு, அதிலிருந்து இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு பிறநாட்டு உதவியாகக் குறைந்தது ரூ 250 கோடி எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, நாம் இன்னும் அதிகத் தொகையைக் கண்டுபிடிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அபிவிருத்தித் திட்ட செலவுகளுக்கு மட்டும் ரெவினியூ கணக்கிலிருந்து கிரெடிட் வசதி இல்லாது செய்துவிட வேண்டும். எனவே புதிய வரிகள் போடவோ, அல்லது ஏற்கனவே இருந்துவரும் வரி விகிதங்களை உயர்த்தவோ வேண்டிவரும். இப்படிப்பட்ட நிலையில் பிற நாட்டு உதவியை நிராகரிப்பது நமக்குத்தான் பெரும் பளுவாக இருக்கும்"

இவ்வாறு குறிப்பிட்ட அவர், மேலும் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிக் கவலை இல்லையென்றும், அடுத்த 18 திங்களுக்குள் ரூ 800 கோடி செலவிடப்படும் என்றும் தெரிவித்தார்.

திரு—கொச்சி பி. சோ. கட்சி

போராட்டம் நடத்தும்!

உபதேர்தலில் ஒதுங்கியிருப்பர்

எர்ணாகுளம், மே. 9—

திரு—கொச்சி பிரஜா சோஷலிஸ்டு கட்சியின் நிர்வாகக் குழு கூட்டத்தில், "பி. சோ. கட்சி, திரு — கொச்சியில் ஜனநாயக எதிர்க் கட்சியாக இயங்க வேண்டும்" என்று முடிவு செய்யப்பட்டது. கூட்டத்திற்கு பட்டம் தாணுப் பிள்ளை தலைமை தாங்கினார்.

சட்டசபையில் பெரும்பான்மைக் கட்சியினராக பி. சோ. கட்சியினர் தேர்ந்தெடுக்கப்படும்வரை அதிகாரப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று தீர்மானிக்கப்பட்டதாம். இந்த முடிவை பட்டம் தாணு பிள்ளையும், குஞ்சு கிருஷ்ண பிள்ளையும் எதிர்த்தார்களாம்.

"காங்கிரஸ் அல்லது கம்யூனிஸ்டு கட்சியுடன் எந்தவிதமான தொடர்பும் கொள்வதில்லை," என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாம்.

"நிலச் சட்டம், தேசீய மயமாக்குதல், குறைந்த கூலி, லஞ்ச எதிர்ப்பு மசோதா இவைகளைப் பொறுத்தமட்டில் பி. சோ. கட்சி கிளர்ச்சிகளை நடத்த வேண்டும்," என்று தீர்மானிக்கப்பட்டதாம்.

திருச்சூர் தொகுதியில் திரு—கொச்சி சட்டசபைக்கு நடைபெற இருக்கும் உபதேர்தலில் கலந்து கொள்வதில்லை என்றும், பி. சோ. கட்சி வாக்காளர்கள் கட்சியின் நலன் பாதிக்கப்படாது தங்களுக்கு விருப்பமானவர்களுக்கு வாக்களிக்கலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டதாம்.

பாலாறு தகராறு

தீர்த்துக்கொள்ள சென்னை முயற்சி

சென்னை, மே. 9—

'பாலாறு தண்ணீர்த் தகராறில் ஒரு சுமுகமான நிலை ஏற்பட சென்னை, மைசூர் மாநில சர்க்கார் பிரதிநிதிகள் இருவர் கூடி விவாதிக்க வேண்டும்' என்று மத்திய சர்க்கார் தெரிவித்திருந்த யோசனையைப் பற்றி, சென்னை சர்க்கார் மைசூர் சர்க்காருடன் ஆலோசனை நடத்தி வருகிறார்களாம்.

சென்னைக்கு மத்திய சர்க்கார் தெரிவித்திருந்த யோசனைகளடங்கிய அதே பிரதி ஒன்று மைசூர் சர்க்காருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாம்.

இரண்டு மாநிலங்களின் பிரதம எஞ்சினீயர்களும் இப்பிரச்சினை குறித்து விரைவில் சந்தித்துப் பேசுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை சர்க்கார் இப்பிரச்சினையில் உடனடி கவனம் செலுத்தத் தலைப்பட்டுள்ளனராம்.

தற்போது சென்னை சர்க்கார், மைசூர் சர்க்காருடன் கடிதப் போக்குவரத்து நடத்திவருவதாகவும், இது பிரச்சினை சம்பந்தமாக மைசூர் பிரதம எஞ்சினீயருடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள சென்னை பிரதம எஞ்சினீயருக்கு அனுமதி கொடுத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இரு பிரதம எஞ்சினீயர்களும் சந்தித்துப் பேச வேண்டிய இடமும், நாளும் விரைவில் முடிவு செய்யப்படுமாம்.

மாமல்லபுரத்தில் பிரயாணிகள் விடுதி

மாமல்லபுரத்திற்கு வரும் ஏராளமான பிரயாணிகளின் வசதிக்காக, சிற்றுண்டிச்சாலையுடன் கூடிய பிரயாணிகள் விடுதி ஒன்று இன்னும் ஒரு ஆண்டு காலத்திற்குள் கட்டப்படுமென்றும், ரூ 2 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டுவதற்கான திட்டம் தயாராக இருப்பதாகவும், இத்திங்கள் 19-ந் தேதியன்று மாநில முதலமைச்சர் காமராசர் அஸ்திவாரக் கல் நாட்டுவார் என்றும் கூறப்படுகிறது.

10 ஏகர் நிலப்பரப்பில் கட்டப்படவிருக்கும் இக்கட்டிடம் 8 அறைகள் கொண்டதாக இருக்குமாம்.

இந்தக் கட்டிடம் கட்டுவதற்கு ஆகும் செலவில் 1 லட்சம் ரூபாயை மத்திய சர்க்கார் நன்கொடையாகத் தருவர் என்றும், மற்றச் செலவுகளனைத்தையும் மாநில சர்க்கார் ஏற்றுக் கொள்வரெனவும் தெரிகிறது.

கட்டிடத்திற்காகும் மொத்தச் செலவு 1 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கென்யாவில் படுகொலைகள்

ஆப்பிரிக்க போலீஸ் இன்ஸ்பெக்டர், போலீஸ் குழு ஒன்றுடன் சென்று, 'பயங்கரவாதிகள்' என்று வெள்ளையரால் வர்ணிக்கப்படுகிறவர்களின் 'ஜெனரல்' என அழைக்கப்படும் கராஞ்சாகி மாவ் என்பவரையும், அவரைச் சார்ந்த சிலரையும் 'கண்ணி' வைத்து தாக்கி சுட்டுக் கொன்றனர் என்று தெரிகிறது.

கடந்த வாரத்தில் மட்டும் இவரைச் சேர்த்து 5 'ஜெனரல்'கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

சோஜா எனும் மருதிக்கருகில் கடந்த புதன்கிழமையன்று ஜுலு வகுப்பைச் சேர்ந்த ஒருவரை இந்த பயங்கரவாதிகளென வர்ணிக்கப்படுவோர் குத்திக் கொலை செய்யப்பட்டதை ஒட்டி சந்தேகத்தின் பேரில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

நைரோபியில் கடந்த இருதினங்களுக்குள் இரண்டு ஆப்பிரிக்கர்கள் இவ்வாறு கொல்லப்பட்டனராம்.

மேலும், சென்ற வாரத்தில் ஆப்பிரிக்க போலீஸ் குழுவிற்கும் இந்த 'பயங்கரவாதி'களென அழைக்கப்படுவோருக்கும் இடையில் காடு ஒன்றில் நடந்த கடும் போரில் ஏழு பேர் கொல்லப்பட்டனர் என்றும், ஒருவர் படுகாயம் பட்டனர் என்றும் தெரியவருகிறது.

பெங்களூரில் மே தின விழா

என்றும் காணக் காட்சி

8—5—55-ல், பெங்களூர் மாவட்ட தி. மு. கழகச் சார்பில் மே தின விழாவையொட்டி, நகரின் பகுதிகளனைத்திலும் மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் தோழர் எ. டி. பிரான்சிஸ் தி. மு. கழகக் கொடியை ஏற்றிவைத்த பின்னர், பிளாக்பள்ளி கழகப் பணி மனையிலிருந்து ஆரம்பித்த மாபெரும் ஊர்வல அணிவகுப்பு இலட்சிய ஒலிகளை முழக்கிக்கொண்டு பெங்களூரின் தண்டு, ஜிட்டி ஆகிய பகுதிகளின் வழியே சென்றது. ஊர்வலம் சிட்டி பகுதியில் செல்லும்போது அங்குள்ள மக்கள் ஆங்காங்கே தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்து நீர் வழங்கி ஊக்குவித்தனர். அக்கிப்பேட்டைப் பகுதியில் ஊர்வலம் சென்றபோது தோழர்களுக்குக் குளிர்ந்த மோர்ப் பானம் வழங்கப்பட்டது. இறுதியில் ஊர்வலம், தொழிலாளர் பகுதியான சீராமபுரத்தின் மையத்திலுள்ள சிறிய சோலையில் முடிவுற்றது.

அங்கு நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கி. சோழன், இளஞ்சேரன் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின்னர், செயலாளர் தோழர் எ. டி. பிரான்சிஸ், கிளைக் கழகங்கள் ஆற்றிய அரும் பணிக்கும், மற்றும் பல மன்றங்கள், சங்கங்கள் ஆகியவற்றின் உதவிக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

காலை $8\frac{1}{2}$ மணிக்கு ஆரம்பித்த ஊர்வலம் சுமார் 15 கல் தொலைவு நடந்து, மாலை $2\frac{1}{2}$ மணிக்கு முடிவுற்றது.

சென்னை—

ஆல்வார்பேட்டை

7—5—55 மாலை 7 மணியளவில் தோழர் அ. செல்வராசன் தலைமையில் நடைபெற்றது தோழர்கள் இரா. அகமழகன், தி. நா. நாகராசன், ஜெயராமன், தே. மு. சண்முகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

ச. வி. நகரம்

7—5—55 காலை 9 மணிக்கு, தோழர் சீ. சகதீசன் தலைமையில் சைக்கிள் ஊர்வலம் நடைபெற்றது. இரவு 8 மணிக்கு தோழர் டி. ஆர். சகதீசன் தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் மு. ந. இராமன், இளங்கோவன், கே. பி. சம்பத் ஆகியோர் மே விழா என்பது பற்றி சொற்பொழிவாற்றினர்.

கும்மிடிபூண்டி

8—5—55 மாலை 4 மணியளவில் மே விழாவையொட்டி தோழர் ஆ. பெ. கணேசன் தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது. மாலை 6 மணிக்கு, தோழர் ஈ. எஸ் மணி தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் ப. செ. தாயமணி, கலைமணி, சேரலாதன், இரா. புலியரசு, கு. மாணிக்கம், எ. இராதாமணாளன், ஆ கிருஷ்ணன், இசையரசு, தோழியர் சகுந்தலை மணாளன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

செங்காட்டுப்பட்டி

8—5—55 இரவு 8 மணிக்கு, வடக்குப் பெருமாள் கோவிலில், அரு. ஆதிமூலம் தலைமையில் நடைபெற்றது. தலைவர் தமது முன்னுரையில், மே தின சிறப்புப்பற்றி எடுத்துரைத்த பின்னர், தோழர்கள் பெ. மு. அரங்கசாமி, மதுசூதனன், பெ. அரங்கசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தலைவர் தமது முடிவுரையில், சாதி மத பேதங்களை மறந்து, கட்சி வேற்றுமைகளை நீக்கி, எல்லோரும் ஒன்றுபட்டு, திராவிட நாடு பிரிவினைக்கு ஒத்துழைப்பதாக இந்த மே தினத்தில் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

ஆங்கில்பாடி

6—5—55 மாலை $4\frac{1}{2}$ மணியளவில், தோழர் கு செல்லப் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தோழர் எம். வடிவேல், மற்றும் சில தோழர்கள், மே தின விழா பற்றியும், அதன் நோக்கம் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

ஆனைமலை

6—5—55 இரவு 7 மணியளவில், மாரியம்மன் கோவில் மைதானத்தில், தோழர் அ ச. வெங்கிடாசலம் தலைமையில் நடைபெற்றது. தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள், 'மே தின விழாவும், ஐந்தாண்டுத் திட்டமும்' என்னும் பொருள்பற்றி விரிவுரையாற்றினார். துவக்கத்தில், தோழர் எழிலரசு, 'மே தின விழாவும், சமுதாயமும்' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றினார். கூட்ட இறுதியில் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

அய்யம்பேட்டை

4—5—55 மாலை 6 மணிக்கு, கிருஷ்ணா டாக்கீஸ் முன்புள்ள திடலில், தோழர் இராமானுசம் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் அலாவுதீன், இராமச்சந்திரன் ஆகியோர் பேசிய பின், தோழர்கள் கே. எஸ் சௌந்தரராசன், என். கிட்டப்பா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

முத்துப்பேட்டை

4—5—55ல், எ. எ. என் திடலில் விழா நடைபெற்றது. அன்றுமாலை 3-மணிக்கு கழக அலுவலகத்திலிருந்து, சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகளின் வழியாக வந்து இறுதியில் பொதுக்கூட்டத் திடல் வந்தடைந்தது. மாலை 5 மணிக்கு தோழர் ந. தருமலிங்கம் தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் இரா. நடராசன் பேசியபின், தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் மேதின விழாவினை பற்றி அரியதோர் சொற்பொழிவாற்றினார்.

பட்டுப் பூச்சியின்றியே பட்டு நூல்!

மிலான் (இத்தாலி) மே 9—

பட்டுப்பூச்சி இல்லாமலேயே பட்டு நூல் தயாரிக்கக்கூடிய புது வழி ஒன்றினை வோஹேரா எனுமிடத்திற்கருகில் வசித்து வரும் கார்லோ காண்டினி எனும் டாக்டர் ஒருவர் கண்டுபிடித்துள்ளாராம்.

முசுக்கட்டை இலைகளிலிருந்தே நேரடியாக பட்டு நூல் உற்பத்தி செய்யும் முறையை, தாம் கடந்த 3 ஆண்டு கால சோதனைகளுக்குப் பின்னர் கண்டுபிடித்துள்ளதாக அவர் அறிவித்திருக்கிறார்.

220 ராத்தல் எடையுள்ள முசுக்கட்டை இலைகளிலிருந்து தாம் 44 ராத்தல் எடையுள்ள பட்டு தயாரித்திருப்பதாகவும், பட்டுப் பூச்சிகளைக் கொண்டு உற்பத்தி செய்தால், அதே அளவு எடை பட்டு உற்பத்திக்கு மும்மடங்கு எடையுள்ள முசுக்கட்டை இலைகள் தேவைப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

பட்டுநூல் உற்பத்திக்கு மற்ற இலைகளைக் கொண்டும் சோதனைகள் நடத்தியதாகவும், ஆனால் முசுக்கட்டை இலைகள் மட்டும்தான் பட்டு நூல் கொடுப்பதாகவும், உற்பத்தி செய்யப்பட்ட பட்டு நூல் இழைகளைப் பதப்படுத்த இயந்திரங்களை அமைத்து வருவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

செய்திச் சுருள்

★

நெல்லிகுப்பம் மஜீத் மன்ற அமைப்புக் கூட்டம்

மாயூரம் தலைமை அஞ்சல் அலுவலகத்திற்கு அருகில் உள்ள இராமதுரை சைக்கிள் கம்பெனியில், 8—5—55 காலை 10 மணியளவில், 'நெல்லிக்குப்பம் மஜீத் மன்ற'த்தின் அமைப்புக் கூட்டம் நகர தி. மு. கழகச் செயலாளர் என். கிட்டப்பா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மா. கி. இராமசாமி, வி. சங்கையன், எஸ். மீனாட்சிசுந்தரம், கே. எஸ் சௌந்தரராசன் ஆகியோர் மன்றத்தின் அவசியம் குறித்துப் பேசியபின், மன்ற நிர்வாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: ஆர் இராமதுரை; துணைச் செயலாளர்: மா. கி இராமசாமி; பொருளாளர்: பண்டரிநாதன். மற்றும் 8 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சௌந்திரபாண்டியனார் பகுத்தறிவு மன்றம்

24—4—55 இரவு 8 மணிக்கு, தோழர் எம். பன்னீரையா தலைமையில் நடைபெற்ற பம்பாய்—தாராவியிலுள்ள மேற்படி மன்றச் செயற்குழுக் கூட்டத்தில், தோழர் புத்தரசு அவர்கள், இவ்வாண்டு 'பாண்டியன்' — ஆசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

வாணி நிலையம் ஆரம்பப் பாடசாலை ஆண்டு விழா

காஞ்சீபுரம், மே. 9—

மேற்படி ஆரம்பப் பாடசாலை ஆண்டு விழா, திரு. ஒ எ. முத்துசுவாமி தலைமையில் நடைபெற்றபோது, திரு. சி. தேப்பெருமாளையா உருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசினார்.

பின்னர், "புது வாழ்வு" நாடகத்தைச் சிறுவர்கள் நடித்தனர். களியாட்டங்களுக்குப் பின், திரு. ஏ. செல்வராஜ், பாராட்டுரை வழங்கினார்; திரு. எஸ். குமாரசுவாமி பரிசுகள் வழங்கினார்.

மதுரை—கோரிப்பாளையம் சிங்காரவேலர் நினைவுப் படிப்பகம்

8—5—55 மாலை 6 மணிக்கு படிப்பகத்தின் செயற் குழுக் கூட்டம் தோழர் கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றபோது, ஜூன் மாதம் முதல் வாரத்தில் படிப்பக மூன்றாவது ஆண்டு விழா நடத்துவதென்றும், அதுபோது, மறைந்த மாவீரர்கள் அழகிரி, பன்னீர் செல்வம் ஆகிய இருவரது உருவப் படங்களைத் திறந்து வைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

85 மணி நேர சைக்கிள் சவாரி

வாணியம்பாடி நகரில், தோழர் வி. எஸ். விஸ்வநாதம் தலைமையில், கள்ளக்குறிச்சி எஸ் நடராசன் என்பவர் 85 மணி நேரம் இடைவிடாது சைக்கிள் சவாரி செய்தார். சைக்கிள் சவாரியை சப்-மாஜிஸ்திரேட் திரு. பி. சீனிவாசன் துவக்கிவைத்தார். தோழர் வி. என். தத்தப்பன் சொற்பொழிவாற்றினார். சவாரி முடிவில் தோழர் நடராசனுக்கு மலர் மாலைகளும், பரிசுகளும் வழங்கப்பட்டன.

பாராட்டு

8—5—55 மாலை 4 மணிக்கு கூறைநாடு நடராச விலாஸ் ரைஸ் மில்லில், தோழர் எஸ். என். குருமூர்த்தி தலைமையில், பொதுக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் என். கிட்டப்பா அவர்களைப் பாராட்டுமுகத்தான் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் சி. ஜம்பு, எஸ்கே ஆனந்தன், வி. எ பாண்டியன், ஆா. ராமானுஜம் ஆகியோர் பேசினர். கூட்டத் துவக்கத்தில் தேநீர் விருந்தளிக்கப்பட்டது.

மாணவர்கள் சாலை அமைப்பு துவக்க விழா

6—5—55ல், பெண்ணாடத்திலிருந்து அகரம் எனுமிடத்திற்குச் செல்லும் சாலை அமைப்புப் பணி திரு. கே சீனுவாசன் தலைமையில் துவக்கப் பெற்றது. இப்பணியில் பெண்ணாடம் கழக உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த சுமார் 60 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

முதன் முதலில், தென்னார்க்காடு மாவட்டக் கலெக்டர் உத்தண்டராமன் மண்வெட்டும் பணியினைச் செய்து, மேற்படி வேலையைத் துவக்கி வைத்திருக்கிறார்.

இப்பணி, ஒரு மாத காலத்திற்கு மத்திய சர்க்காரின் பொருளுதவியுடன் நடைபெறும் என்றும் கூறப்படுகிறது. (ச. கி.)

'சிவசிதம்பர மன்ற'த் திறப்பு விழா

பெண்ணாடம் கழக உயர்நிலைப் பள்ளியில், திரு. சிவ. பழமலை அவர்களால் கட்டி முடிக்கப் பெற்ற 'சிவசிதம்பர மன்ற'ம், தென்னார்க்காடு மாவட்டக் கழகத் தலைவர் எஸ் சாமிக்கண்ணு எம். எல். ஏ, தலைமையில், கலெக்டர் உத்தண்டராமன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

பிரிவு உபசாரம்

காட்டுமன்னார் கோவில் இராசேந்திர சோழன் உதவி பெறும் துவக்கப்பள்ளி ஆசிரிய நிர்வாகியாகப் பல ஆண்டு காலமாக பணியாற்றிய திரு. வெ. சிவசிதம்பர நயினார், தமது பணியினின்றும் 29—4—55ல் விலகிக்கொண்டதையொட்டி, அவருக்கு மேற்படி பள்ளி ஆசிரியர்களால் பிரிவு உபசார விழா நடைபெற்றது.

திருமணங்கள்

5—5—55 காலை 9 மணியளவில், கல்லார் எஸ்டேட்டில் தோழர் எ. சண்முகம்—தோழியர் பி. பாலாயி அம்மையார் திருமணம் தோழர் கே.பி. பிச்சைமுத்து தலைமையில் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தித் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

• • •

5—5—55ல், சுழிஞ்சூர் தி. மு. கழகத் தோழர் கோ. இராமசாமி—தோழியர் அமிர்தம்மாள் திருமணம், தோழர் எ எல். சி. கிருட்டிணசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வி மு கரிகாலன், இளஞ்செழியன், கருத்தோவியன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

• • •

5—5—55ல், சிங்கிபுரம் தி. மு. கழகத் தோழர் எஸ். பி. மாரிமுத்து—தோழியர் பழனியம்மாள் திருமணம், தோழர் எம் பி சுப்பிரமணியம் எம். எல். ஏ, தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆ சேரலாதன், குமரவேல், மற்றும் பலரும் மணமக்களை வாழ்த்திச் சொற்பொழிவாற்றினர்.

மறைவு

19—4—55 காலை $8\frac{3}{4}$ மணிக்கு தேவபாண்டலம் கழகத் தோழர் வி. செவத்தான் அவர்களது மூத்த சகோதரர் இயற்கையெய்தியதையொட்டி, 3—5—55-ல், தோழர் எ. இராமசாமி தலைமையில் சீர்திருத்த முறையில், இறுதி நாள் சடங்குகள் நடைபெற்றன. தோழர் டி. பி. சேகவன் சொற்பொழிவாற்றினார். இதையொட்டி 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

இரா. நெடுஞ்செழியன் சிறப்புரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"இன்றுதான் தொழிலாளர்கள் வாய்திறந்து கேட்கிற நிலை வளர்ந்திருக்கிறது.

"இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் 'கேள் — கொடுக்கப்படும்; தட்டு — திறக்கப்படும்' என்று, இயேசு கிறிஸ்து கூறினார்.

"இன்று, கேட்டால்தான்— கிடைக்கும்; தட்டினால்தான் — திறக்கப்படும்!

"ஒரு காலத்தில் தொழிலாளர்கள், கொடுத்ததை வாங்கிக்கொண்டு, வாய்மூடி, கைகட்டி காலந்தள்ள வேண்டியவர்களாயிருந்தனர்.

"இன்றுதான், 'உலகம் உழைப்பவருடையது; காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்; அவன் காணத் தகுந்தது வறுமையோ! அவன் பூணத் தகுந்ததும் பொறுமையோ! இனியும் பொறுக்கமாட்டோம்!' என்று ஓரளவு விழிப்புப் பெற்று வருகிற நிலை அரும்புகிறது!

"இந்த நாட்டிலே, இன்னும் பல தொழிலாளர்களுக்கு என்ன கேட்கவேண்டும்? எங்கு கேட்கவேண்டும்? எப்போது கேட்கவேண்டும்?—என்பதே தெரிந்திருக்கவில்லை!

"'நம் தேவைகள் என்ன? இந்தத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமலிருப்பதற்குக் காரணம் என்ன?'—என்பதையெல்லாம், தொழிலாளர்கள் தெரிந்துகொண்டவர்களாயிருக்கவில்லை.

"அந்த நிலையில், ஓரளவேனும் வாய்திறந்து, தன் உரிமைகளைக் கேட்கிற நிலை வளர்ந்திருப்பது வரவேற்கத் தக்கதாகும். தொழிலாளர்கள் கூட்டுச் சேர்ந்து கூடி நின்று, தங்கள் குறைகளைக் கண்டறிந்து, அவற்றைக் களைந்து வாழ்வில் முன்னேற்றம் காண முற்படுவதற்கு உதவுவதற்குத்தான் தொழிற் சங்கங்கள் வேண்டுமென்பது—தொழிற் சங்கங்கள் இருப்பது!

"தொழிலாளர்களுக்குச் சரிய பாதுகாப்பு செய்து தர வேண்டுவது ஒரு நல்ல அரசாங்கத்தின் கடமையாகும்.

"இயந்திரத்தோடு வேலை செய்யும் தொழிலாளர்கள், அந்த இயந்திரத்தால் கையையோ, காலையோ இழந்துவிட்டால், அவர்கள் தொடர்ந்து வேலை செய்து சம்பாதிக்க முடியாதவர்களாகின்றனர்; அத்தகையோருக்கு இந்த நாட்டில் என்ன பாதுகாப்பு இருக்கிறது?

"தினந்தோறும் வேலைசெய்து சம்பாதித்து வாழ்நாளை ஓட்டிக்கொண்டிருக்கும் தொழிலாளர்கள், 25 அல்லது 30 ஆண்டுகள் உழைத்த பின்பு தொடர்ந்து வேலைசெய்ய முடியாமல் ஓய்வு பெறவேண்டிய நிலை வரும்போது, தங்களின் எஞ்சிய கால வாழ்வை எப்படிக் கழிப்பார்கள்? அதற்கென்ன வழி? பாதுகாப்பு?

"இன்றைய நிலையில் தொழிலாளர்களுக்கு நல்ல பாதுகாப்பு கிடைப்பதாகக் கூறிவிட முடியாது; அந்தப் பாதுகாப்பைத் தேடித்தர வேண்டியது அரசாங்கத்தின் நீங்காக் கடமையாகும்.

ஒரு தொழிற்சாலை இயங்குவது எப்படி? முதலாளி, தொழிற்சாலைக்குத் தேவையான கட்டிடம், இயந்திரசாதனங்கள், உற்பத்திக்கான மூலப்பொருட்கள் முதலியவற்றிற்காக மூலதனம் போடுகிறார். அந்தத் தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளர்கள் தங்கள் உழைப்பைச் செலவிடுகிறார்கள். இப்படி முதலாளியின் மூலதனமும், தொழிலாளியின் உழைப்பும் சேர்ந்துதான் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களாக மாறுகின்றன.

"ஆனால், அத்தொழிலில் கிடைக்கும் இலாபம், மூலதனம் போடுகிற முதலாளிக்கு மட்டுமே போய்ச் சேருகிறது; உழைக்கிற தொழிலாளிக்கு—இயந்திரங்களுக்குஎண்ணெய்போடுவது போல—கூலி மட்டும் தரப்பட்டு விட்டு இலாபத்தில் பங்கு எதும் தரப்படுவதில்லை. தொழிலாளர்களின் எதிர்காலப் பாதுகாப்பிற்கு நியாயமாகவே தொழிலில் கிடைக்கும் இலாபத்தில் பங்கு தரப்பட வேண்டுமென்பது இன்று தொழிலாளர்களின் கோரிக்கைகளில் முக்கியமானதாகும்.

"மேலும், மூலதனம் போடுகிற முதலாளி தனிப்பட்டவராயிருப்பதால், கிடைக்கும் இலாபம், ஒரு தனி மனிதரின் சுகபோகமான வாழ்வுக்கு மட்டுமே பயன்படுகிறது.

"இந்நிலைக்கு மாறாக, மூலதனம் போடுகிற முதலாளி, நாட்டுமக்களுக்காக இருக்கிற அரசாங்கமாக இருக்க வேண்டும்; எல்லா முக்கியமான தொழில்களையும் நடத்துபவர்களாக அரசாங்கமே இருக்க வேண்டுவதும் மிக முக்கியமானதாகும். ஏனெனில், அப்போதுதான், தொழிலில் கிடைக்கும் இலாபம் தனிப்பட்டவரைச் சேராது, பொதுவான அரசாங்கத்திற்குச் சேர முடியும்.

"'உற்பத்தியைப் பெருக்குங்கள் —உற்பத்தியைப் பெருக்குங்கள்' என்று அரசாங்கம் குரல் எழுப்புகிறது; ஆனால், பெருக்கப்படும் உற்பத்தியினால் கிடைக்கும் இலாபம், யாரோ ஒரு சிலருக்குச் சேரும்போது, தொழிலாளருக்கு, உற்பத்தியைப் பெருக்குவதில் எப்படி அக்கரை இருக்க முடியும்? தொழிலில் கிடைக்கும் இலாபம் நாட்டு மக்களுக்கு—ஏழை எளியவருக்கு—தொழிலாள பாட்டாளிகளுக்குக் கிடைக்கும் வகையில் அரசாங்கத்திற்குச் சேர்ந்தால், தொழிலாளருக்கு—'நாம் வாழ்கிறோம்; நம் நாட்டு மக்கள் வாழ்வு வளம் பெறுகிறது; நாம் உழைப்பது, நம் நாட்டு மக்களுக்காகத்தான்'—என்ற எண்ணம் பிறக்கும்; தொழில் வளரும்; உற்பத்தி பெருகும் அந்த நிலைமை இங்கில்லையே! அந்த நிலை வளர்வதற்கு தொழிலாளர்களும், இதர பொது மக்களும் பாடுபட்டாக வேண்டும்.

"தொழில் நடத்துவதில் முதல் 'நாணயமான மனித'னாக அரசாங்கம்தான் இருக்கும் என்று மக்கள் நம்புவார்கள்; அரசாங்கம் தான், வேறு பல தொழில் முதலாளிகளைப் போலன்றி, பொதுமக்களுக்காக இருக்கும் பொதுவான 'மனிதன்' என்பதால், அரசாங்கத்திடம்தான் நாணயத்தையும், நேர்மையையும் மக்கள் எதிர்பார்ப்பர். அதற்கொப்ப அரசாங்கம் நடந்துகொள்ள வேண்டும் என்பதும் இன்றியமையாததாகும்.

"இன்றுள்ள சென்னை சர்க்கார் பஸ் போக்குவரத்தைத் தனது நிர்வாகத்தில் வைத்துள்ள முறை —'அந்த நிர்வாகத்தையே தனிப்பட்டோரிடம் விட்டுவிட வேண்டும்,'— என்று, இங்கு பேசிய தோழர் ஒருவர் கூறிய அளவுக்குப் படுமோசமாக இருக்கிறது. எனவே அரசாங்கம், 'இதனை இதனால் இவன் முடிக்குமென்றாய்ந்து இதனை இவன்கண் விடல்' என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கொப்ப திறம்பட நிர்வகிக்க வேண்டும் தனிப்பட்ட முறையில் சிறந்த நிர்வாகிகளாயிருக்கும் டி. வி. எஸ், ஜி. டி. நாயுடு போன்றவர்களை நிர்வாகிகளாகப் பணியாற்றுமாறு செய்து, பலன் பெற முயற்சிக்க வேண்டும். அதை விடுத்து, பஸ் தொழிலுக்குச் சம்மந்தமே இல்லாதவர்களை நிர்வாகிகளாக்கி, தொழிலில் ஊழல்களை வளர்த்து, கெட்ட பெயர் சம்பாதித்துக் கொள்ளக் கூடாது."

'பக்திமான்' போர்வையில் உலவும் 'சாது'க்கள்!

இந்தியாவின் 'ரஸ்புடீன்'கள்!

அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி வர்ணனை

அலகாபாத், மே. 9—

"'பக்திமான்கள்' என்ற போர்வை போர்த்திக்கொண்டு நாட்டில் உலவும் இந்திய 'ரஸ்புடீன்'கள், பெண்களை மானபங்கப்படுத்துவதை இனியும் அனுமதிக்க முடியாது,"

என்று அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி, 'சாது' ஒருவரின் மனு விசாரணையின்போது தீர்ப்பு கூறுகையில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னன் பாபா என்ற பெயருடைய அந்த 'சாது', தன் மீது பெண்களைக் கடத்திச் சென்றதாகவும், மற்றும் சில குற்றச்சாட்டுகளுக்காக கீழ் நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் 'கிரிமினல்' நடவடிக்கைகளை ரத்து செய்யும்படி கோரி அலகாபாத் உயர் நீதிமன்றத்திற்கு மனுச் செய்துகொண்டார்.

அந்தக் கோரிக்கை மனு விசாரணையின்போது தீர்ப்புக் கூறுகையில்தான், உயர் நீதிமன்ற நீதிபதி மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

இந்த 'சாது', கோரக்பூருக்கு அருகிலுள்ள ஒரு இடத்தில் 'ஆசிரமம்' ஒன்றை நடத்திவருவதாகவும், சென்ற ஆண்டு ஏப்ரல் 19-ந்தேதியன்று போலீசார் இந்த ஆசிரமத்தைச் சோதனையிட்டபோது பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும், அந்த மாதிரியான ஆயுதங்கள் பல கொள்ளைக்கூட்டத்தவருக்கு விநியோகிக்கப்பட்டு வந்ததாகவும் கூறப்பட்டது.

ஆயுதங்கள் மட்டுமல்ல—அங்கே 16, 18 வயதுற்ற இரண்டு இளமங்கையரும் கண்டுபிடிக்கப்பட்டனராம்!

இந்த இரண்டு மங்கையருக்கும் சென்னன் பாபா 'சாது'வுக்கும் 'நெருங்கிய தொடர்பு' இருந்துவந்ததாகவும் கூறப்பட்டது!

தந்தி கம்பி திருடர்களின் நேரு பக்தி!

பண்டிதர் பேச்சு ஒலிபரப்பியதும் கம்பி கத்தரிக்கப்பட்டது!

பெர்காம்பூர், மே 9—

கிழக்குக் கடற்கரையோர பெரிய பாதையில் அமைக்கப்பட்டிருக்கும் தந்திக் கம்பிகள், அடிக்கடி கள்ளக் கூட்டத்தால் களவாடப்பட்டு வருகின்றன.

இங்கு நடைபெற்ற காங்கிரஸ் குழு கூட்டத்தில் நேரு பண்டிதர் பேசிய பேச்சு ஒலிபரப்பப்பட்டு முடிவடைகிற வரை, தெரிந்தோ தெரியாமலோ, கம்பிகள் கத்தரிக்கப்படாமல் இருந்தன.

கடந்த ஆறு மாதங்களாகவே, கம்பித் திருடர்கள் கம்பிகளைக் கத்தரித்து வருகின்றனர். இம்மாதம் முதல், அவர்கள் தொழிலைத் தீவிரமாக்கியுள்ளனர்.

பண்டிதர் பேச்சு ஒலிபரப்பி முடிவடைந்ததும், கம்பிகள் துண்டிக்கப்பட்டுவிட்டதாக அஞ்சல் அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்தது மீண்டும் கம்பிகள் பழுது பார்க்கப்பட்டுவிட்டதாம்.

தனிமாநிலம் கோரி சீக்கியர் போர்க்கோலம்!

தடை உத்தரவை மீறிய மாஸ்டர் தாராசிங் கைது

அமிர்தசரஸ், மே 10—

பஞ்சாப் அகாலி தளத்தின் தலைவரான மாஸ்டர் தாரா சிங்கும், அவருடன் 10 பேரும் இன்று, செராய் குருராம்தாஸ் எனுமிடத்தில் அங்கு அமுலிலிருந்துவரும் ஊரடங்குச் சட்டத்தை மீறியதாகக் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இந்த ஊரடங்குச் சட்டம் அப்பகுதியில் கடந்த ஏப்ரல் மாதம் ஆரம்ப முதலே அமுலில் இருந்து வருகிறதாம்.

'சீக்கியர்களுக்குத் தனி மாநிலம் வேண்டும்' என்று, தடையுத்தரவை மீறி அவர்கள் முழக்கமிட்டனராம்.

'பஞ்சாபி பேசும் மக்களுக்குத் தனி மாநிலம் வேண்டும் என்று கோரும் இயக்கத்திற்கு ஆதரவாகக் கோஷமிடக் கூடாது,' என்பதே மேற்படி தடையுத்தரவு.

'இந்தத் தடை உத்தரவானது நியாயமற்றது — சட்டத்திற்குப் புறம்பானது,' என்று மாஸ்டர் தாராசிங், தடையுத்தரவை மீறுவதற்கு முன்னர் ஒரு முறை கூறியிருக்கிறார்.

'சாத்வீக'மான முறையில் கிளர்ச்சிநடத்த மக்களுக்கு உரிமை உண்டென்றும், அந்த உரிமையைப் பாதுகாப்பதற்காகவே தாம் தடையுத்தரவை மீறினதாகவும் அவர் கூறினார்.

தம்முடைய குறைந்தபட்சக் கோரிக்கையெல்லாம் இந்திய சர்க்காரில் இந்திய அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு, பஞ்சாபி பேசும் மக்களுக்கென ஒரு தனி மாநிலம் வேண்டும் என்பதேயாகும் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

'சீக்கியர்களுக்குத் தனி மாநிலம் வேண்டும்' என்று கோஷித்துக்கொண்டே ஆலயம் ஒன்றிலிருந்து தமது சீடர்களுடன் வெளிவந்துகொண்டிருக்கையிலேயே அவர் போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

மாஸ்டர் தாராசிங் கைது செய்யப்படும் காட்சியைக் காண ஆலயத்தினுள் சுமார் 15,000-க்கு மேற்பட்ட சீக்கியர்கள் குழுமியிருந்தனராம்.

மாஸ்டர் தாராசிங் கைது செய்யப்பட்ட பின்னர், குதிரைப் போலீசாரும், ஆயுதந்தாங்கிய போலீசாரும் அந்த ஆலயத்தை வளைத்துக்கொண்டு காவல் புரிந்து வருகின்றனராம்.

சர்க்கார் தடையுத்தரவை திரும்பப் பெற்றுக்கொள்ளும் வரையிலும் எதிர்த்துப் போராடப் போவதாக மாஸ்டர் தாராசிங் கூறியுள்ளார். போராட்டத்தை விடாமல் தொடர்ந்து நடத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

செங்கற்பட்டு மாவட்ட

தி.மு. கழக உறுப்பினர்கட்கு

"செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் 15—5—55 காலை 10 மணிக்கு, பூந்தமல்லி கண்டோன்மெண்ட் செட்டித் தெரு, குமணன் சாவடியில் நடைபெறும். மாவட்டக் கழக உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வர வேண்டுகிறேன். அதுபோது மாநில மாநாட்டுக்கு நிதி திரட்டுவதற்கான வழிவகைகள் பற்றியும், மாவட்டத்தில் நடைபெற வேண்டிய கழகப் பணிகள் குறித்தும் ஆராயப்படும்,"

என, செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. டி. எஸ். மணி அறிவிக்கிறார்.

பம்பாய் தி. மு. கழகப் பொதுக்குழுக் கூட்டம்

"15—5—55 காலை 10 மணி அளவில், காந்தவல்லி தி. மு. கழக அலுவலகத்தில் நடைபெறும். மாநில மாநாட்டிற்கு நிதி அளித்தல் போன்ற பல முக்கிய பிரச்சினைகளிருப்பதால், பொதுக் குழு பிரதிநிதிகளும், கிளைக் கழகச் செயலாளர்களும் தவறாது குறித்த நேரத்தில் வந்து கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றேன்,"

என, பம்பாய் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் எஸ். தியாகராசன் அறிவிக்கிறார்.

அறத்துப்பால் நிறைவு விழா

12—5—55 மாலை 5 மணிக்கு, சென்னை ஜி. எம். டி டி. வி. உயர் பள்ளியில், திருக்குறள் அறத்துப்பால் முடிவு பெறுவதை முன்னிட்டு, பெத்துநாய்க்கன்பேட்டை தாய்மார் கழகச் சார்பில், திருமதி காந்தம் தலைமையில் நடைபெறும் திரு. மயிலை சிவமுத்து பொருட்பாலைத் துவக்கி வைப்பார். குறள் வகுப்பில் பேசிய பெண்மணிக்கு திருமதி என். கண்ணம்மாள் பரிசளிப்பார். அவ்வமயம் டாக்டர் எஸ். தருமாம்பாள், திருமதிகள் குஞ்சிதம் குருசாமி, சந்திரா ராஜப்பா, சாரதாம்பாள், பார்வதி, அனுசூயா மோகனசுந்தரம் ஆகியோர் பேசுவர்.

வரவேற்பு

16—5—55 மாலை, பெங்களூர், தண்டு வீரப்பிள்ளைத் தெரு, மூகம்மதலி ஹாலில், பெங்களூர் தமிழ் மன்றத்தின் சார்பில் ஒரு மாபெரும் வரவேற்பு விழா நடைபெறும். தோழர் கா. அப்பாதுரை, திரு. இலக்குவனார், டாக்டர் இராசமாணிக்கனார், குன்றக்குடி அடிகளார், திருவாடுதுறை டி. என். இராசரத்தினம், திருவை சொக்கப்பா, சின்ன அண்ணாமலை ஆகியோர் கலந்துகொள்வர்.

'தவறான பாதை'—நாடகம்

13—5—55 இரவு, 'திமிரி'யில், திருவள்ளுவர் மன்றச் சார்பில் 'தவறான பாதை'—நாடகம், தோழர் வேலூர் இளஞ்செழியன் தலைமையில் நடைபெறும். தோழர் கூத்தரசு பேசுவார்.

அதுதான் காரணமா?

பெர்காம்பூர், மே 10—

இன்று நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில், தமிழ் நாடு உறுப்பினர் திரு இராமச்சந்திரன், இந்தியை அரசாங்க அலுவல் மொழியாக்குவதற்கு 15 ஆண்டுகளிலிருந்து 25 ஆண்டுகளாக்க வேண்டுமென்று கொண்டுவரப் போவதாக அறிவித்திருந்த தனி நபர் தீர்மானத்தை பிரரேபிக்கவில்லையாம்!

இதுபற்றி காங்கிரஸ் செயற்குழுவே விவாதிக்கும் என்று காங்கிரஸ் அக்கிராசனர் உறுதியளித்திருப்பதாக அவர் தெரிவித்திருக்கிறாராம்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.